தேசிய கிராம சுய ஆட்சித் திட்டம் (RGSY) – பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டின் (Training and Capacity Building) கீழ் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்திட மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.78,68,025/– அனுமதித்தல்

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.III) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.29 நாள்: 31.3.2009

படிக்கப்பட்டவை:

1. சார்புச் செயலாளர், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், இந்திய அரசு கடித எண்.T-11011/10/2008/பயிற்சி நாள் 31.3.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடித எண்.95078/2008, பயிற்சி 1, நாள் 30.4.2008.

*******

**ஆணை:**

தேசிய கிராம சுய ஆட்சித் திட்டத்தின் (Rashtriya Gram Swaraj Yojana) மூலம் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டின் (Training and Capacity Building) கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் மூன்றடுக்கு ஊராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்திட ஆய்வுகளை மேற்கொள்ளவும், கட்டமைப்பு வசதி மற்றும் தொழில் நுட்ப வசதிகளை மேம்படுத்தவும் ரூ.7.33 கோடி வழங்கிட மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

2. மத்திய அரசு மேலே பத்தி 1–ல் உள்ள கருத்துருவினை ஏற்று, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ரூ.6,29,44,200/– அனுமதித்து அதில் 75 சதவீதமான ரூ.4,72,08,150/– இல் முதல் தவணையாக (50%) ரூ.2,36,04,075/–ஐ மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

3. இத்திட்டத்திற்கு மாநில அரசின் 25 சதவீத பங்கான ரூ.1,57,36,050/–ஐ வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இத்திட்டத்திற்கு மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.6,29,44,200/– (ரூபாய் ஆறு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருநூறு மட்டும்)–க்கு நிர்வாக அனுமதி மற்றும் இத்தொகையில் மாநில அரசின் 25 சதவீத பங்களிப்பு ரூ.1,57,36,050/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தேழு லட்சத்து முப்பத்தி ஆறாயிரத்து ஐம்பது மட்டும்)–இல் 50 சதவீதமான ரூ.78,68,025/– (ரூபாய் எழுபத்தெட்டு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து இருபத்தைந்து மட்டும்) முதல் தவணையாக விடுவிக்கவும் முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

**4.** மேலே பத்தி **3–**இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "**2515–00** – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் **– 001** – நெறிப்படுத்தலும் நிருவாகமும் **– 003** பயிற்சி I திட்டத்தில் சேராதது – AA – மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் **– 09** – உதவித் தொகை – **01** நடப்பு செலவுக்கான உதவித் தொகை"
> **(** த தொ கு **2515 00 003** AA **09 19)**

**5.** இச்செலவினத்திற்குத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் **2008–09** இறுதித் திருத்திய நிதியொதுக்கம் மற்றும் **2008–09** இறுதித் துணை மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே பத்தி **3** –இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை உரியவாறு பெற்று மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கிட அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

7. இந்த அரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். **100**/JS (JV) /2009 நாள் **31.03.2009** மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
முதன்மை அரசு செயலாளர்.